**NF - Job Description - Audio Books Project Coordinator**

| | |
|---|---|
| **Job Title - பணித் தலைப்பு** | ஒலிநூற் செயற்திட்ட ஒருங்கிணைப்பாளர் / Audio Books Project Coordinator |
| **Reports To - அறிக்கையிடல்** | தலைமை செயற்பாட்டு அலுவலகர் / Chief Operating Officer |
| **Instructions From - நெறிமுறைகள் பெறுப்படுதல்** | தலைமை செயற்பாட்டு அலுவலகர் / Chief Operating Officer |
| **Pay Band / ஊதியம்** | 20,000 - 30,000 (தகுதிக்கு ஏற்ப) |
| **Base Location - பணி இடம்** | நூலக யாழ்ப்பாண அலுவலகம் |
| **Type - பணி வகை** | முழு நேரம், மாத சம்பளம் |
| **Period of Assignment - பணிக் காலம்** | ஒரு ஆண்டு, நீடிப்புக்கான வாய்ப்புக்கள் உள்ளன. |
| **Date of Duty Assignment - தொடக்க திகதி** | உடனடியாக |
| **விண்ணப்ப முடிவுத்திகதி** | ஜனவரி 19, 2020 |

**நூலக நிறுவனம்**
நூலக நிறுவனமானது (noolahamfoundation.org) இலங்கைத் தமிழ்பேசும் சமூகங்கள் தொடர்பான எல்லா வகையான அறிவுத் தொகுதிகள், மரபுரிமைகளை ஆவணப்படுத்திப் பாதுகாத்து இலவசமாகத் திறந்த அணுக்கத்தில் அனைவருக்கும் கிடைக்கச்செய்யும் முக்கிய பணியை செயற்படும் இலாப நோக்கமற்ற தன்னார்வத் தொண்டு நிறுவனம் ஆகும்.

2005 முதல் இலங்கையின் முதன்மையான தமிழ் எண்ணிம ஆவணக் காப்பகமாகத் திகழும் நூலக நிறுவனம் இதுவரை பல்வேறு செயற்றிட்டங்களூடாக 82,000க்கும் அதிகமான ஆவணங்களை எண்ணிம வடிவங்களில் பதிவு செய்துள்ளது. நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள், பிரசுரங்கள், ஏட்டுச் சுவடிகள், அழைப்பிதழ்கள், கடிதங்கள், கையெழுத்துப் பிரதிகள், ஒலிப்பதிவுகள், நிகழ்படங்கள், வாய்மொழி வரலாறுகள் போன்ற சகலவிதமான ஆவணங்களையும் நூலக நிறுவனம் பதிவுசெய்து வருகிறது. அவ்வகையில் இலங்கைத் தமிழ் பேசும் சமூகங்கள் தொடர்பான முதன்மையான உசாத்துணைத் திரட்டினை நூலக நிறுவனம் உருவாக்கியுள்ளது.

**வாய்ப்பு**
இந்தப் பணி தமிழ் பேசும் சமூகங்களின் அறிவுத்தளங்களை எண்ணிம முறையில் ஆவணப்படுத்தி, பாதுகாத்து மக்களிடம் கொண்டு செல்லும் பணியில் ஈடுபட உள்ளார்ந்து ஆர்வம் கொண்ட ஒருவருக்கானது. நூலக நிறுவனம் ஆனது, அதன் வளங்கள் சமூகத்தின் எல்லா வகையான மக்களையும் சென்றடைய வேண்டும் என்பதில் கவனம் கொண்டுள்ளது. அந்த வகையில், கண்பார்வையற்றோர்களுக்கு சேவை வழங்கும் வண்ணம் ஒலி நூற்கள் செயற்திட்டத்தை முன்னெடுத்து வருகிறது. அந்தச் செயற்திட்டம் ஊடாக ஆசிரியர்கள், வாசிப்பவர்களைக் கண்டடைந்து, அவர்களின் வாசிப்பை ஒலிப்பதிவு செய்து, தொகுத்து,

வெளியிடும் பணியினை ஒருங்கிணைப்பது உங்களின் முதன்மைப் பணியாக இருக்கும். ஆக்கங்களை நீங்களாக வாசித்து ஒலிப்பதிவு செய்து, தொகுத்து வெளியிடுவதும் உங்கள் பணியாக அமையும்.

**கடமைகள்**

- ஒலிநூற் வாசிப்பை ஒருங்கிணைத்தல்
- சூழ்நிலைகளுக்கு ஏற்ப ஒலிப் பதிவு செய்தல்
- ஒலிப் பதிவுகளை audacity அல்லது வேறு பொருத்தமான மென்பொருள் கொண்டு தொகுத்தல் (editing)
- ஆவணகத்தில் தேவையான மீதரவுகளுடன் (metadata) பதிவேற்றல்
- நூலகச் செயற்திட்ட அணியோடு சேர்ந்து இயங்கி, செயற்திட்டத்தை வெற்றிகரமாக நகர்த்திச் செல்லல்
- செயற்றிட்ட மற்றும் நிறுவன அறிக்கையிடல் - Reporting

**தேவைப்படும் தகுதிகள்**

- மாற்றுத்திறனாளிகளுக்கு அறிவு வளங்களை அணுக்கப்படுத்தல் பணிகளில் ஈடுபாடு.
- தமிழ் வாசிப்புத் திறன்.
- ஒலிப் பதிவு, ஒலித் தொகுப்புத் தொடர்பான அடிப்படை அறிவு விரும்பத் தக்கது.
- களப் பணிக்காகப் பல்வேறு இடங்களுக்கும் உள்ளூரில் பயணம் செய்ய விருப்பம் இருக்க வேண்டும்.
- ஒருங்கிணைப்புத் திறன்.
- அணியாகச் செயற்படும் (team work) அணுகுமுறை தேவை. தன்னார்வலர்களை, ஊழியர்களை, ஆர்வலர்களை சகாக்களாக (peers) மதித்துச் செயற்படவேண்டும்.
- சமூகத்தின் பல்வேறு தரப்பினரையும் தொடர்பு கொண்டு பலருடன் அறிமுகம் செய்து தயங்காமல் உரையாடித் தொடர்புகளைப் பெற்றுக் கொள்ளும் தொடர்பாடல் திறமை அவசியமானது.
- தமிழில் நன்கு எழுதும் திறமை (எ.கா அறிக்கைகள், கட்டுரைகள்)
- பல்வேறு வேலைநேரங்களில் வேலை செய்ய வேண்டி ஏற்படலாம். சில சந்திப்புக்களுக்கான நேரங்கள் வார இறுதி நாட்களிலேயே கிடைக்கலாம். செயற்றிட்டம் சார்ந்த ஸ்கைப், தொலைபேசி உரையாடல்கள் வெவ்வேறு நேரங்களில் செய்ய வேண்டியிருக்கும்.
- அடிப்படைக் கணனி அறிவு அவசியம் ஆகும்: எ.கா தட்டச்சு (typing), மின்னஞ்சல் (email), ஸ்கைப் (skype), கூகிள் ஆவணம் (drive.google.com)
- கலைத்துறை, ஊடகவியல், சமூக அறிவியல்கள் அல்லது வேறு எதாவது ஒரு துறையிலும் பல்கலைக்கழகப் பட்டம் இருப்பது விரும்பத்தக்கது.

**விரும்பப்படும் தகுதிகள்**

- அடிப்படை ஆங்கில அறிவு (எ.கா வாசிக்க)
- ஊடகவியல், சமூக ஊடகங்கள் அனுபவம்
- காணொளிகள், ஒலிக்கோப்புக்களை தொகுத்தல் அனுபவம்
- இலாப நோக்கமற்ற நிறுவனங்கள், தன்னார்வச் செயற்பாட்டு அனுபவம்

**பல்வகைத்தன்மை**

நூலக நிறுவனம் தனது சேகரிப்புக்களில், கொள்கைகளில், செயற்திட்டங்களில், கட்டமைப்பில் சமூகத்தின் பல்வகைத்தன்மையை (diversity) காத்திரமாக உள்வாங்கி வளர வேண்டும் என்று உறுதிபூண்டுள்ளது. நூலக நிறுவனம் பால்நிலை (gender), பாலியல் நோக்குநிலை (sexual orientation), சாதி (caste), வயது (age), சமயம் (religion), பிரதேசம் (region) உட்பட்ட எந்த வகைகளிலும் பாகுபாடுகள் காட்டுவதில்லை.

**விண்ணப்ப தேவைகள், முறைகள்**

சுயவிபரம் (resume), அறிமுகக் கடிதம் (cover letter), மற்றும் உங்களைப் பற்றி கூறக் கூடிய மூன்று நபர்களின் தொடர்புகள் (contact information of three references) ஆகியன அவசியம் ஆகும். நீங்கள் நூலக நிறுவனத்தின் மனித வள உப குழுவால் அல்லது நியமிக்கப்பட்ட வேறு ஒரு குழுவால் நேர்காணல் செய்யப்படுவீர்கள்.

ஆர்வமுள்ளோர் ஜனவரி 19, 2020 அன்றோ அதற்கு முன்பதாகவோ மேற்சுட்டப்பட்ட விடயங்களை noolahamfoundation@gmail.com என்ற முகவரிக்கு Attention COO - Application for Audio Books Project Coordinator என்ற விடயத்தலைப்பு (subject line) உடன் அனுப்பி வைக்கவும்.